1994 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை 69 ஆயிரம் பேர் அந்த ஒன்றியத்திலே வருகிறது. ஏற்கெனவே இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அங்கே இருக்கின்றன. 30 ஆயிரம் பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது அரசினுடைய அளவுகோலாக வைத்து அதைச் செய்துகொண்டிருக்கிறோம். எனவே, அந்த வகையிலே பார்க்கும்போது, ஏற்கெனவே இரண்டு பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் இருக்கின்ற காரணத்தால் புதியதாகக் கொடுப்பது சிரமமாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கும்போது ஏறத்தாழ, நீங்கள் கேட்கின்ற ஊரிலிருந்து 10-வது கி.மீட்டரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், 15-வது கி.மீட்டரிலே மற்றொரு ஆரம்ப சுகாதார நிலையமும் இருக்கின்றன. எனவேதான் இதைக் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று தெரிவித்திருக்கிறோம். அதோடு மக்கள் தொகை அடிப்படையிலேதான் செய்துகொண்டு வருகிறோம். இங்கே ஏறத்தாழ 35 ஆயிரம் பேருக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற வகையிலே இருக்கிறது.*

திருமதி இலதா பிரியகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எமர்ஜென்சி சர்வீஸாக பஸ் வசதி இல்லாத காரணத்தினால் 10 கி.மீட்டர் இருந்தாலும் போவதற்குக் கஷ்டமாக இருப்பதால் இதை மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஒரு மருத்துவமனையை உருவாக்கி கட்டுவதைவிட பஸ் விடுவது சுலபம் என்று கருதுகிறேன். (சிரிப்பு) எனவே, அந்தவகையிலே அந்தக் கேள்வியை, அந்தப் பக்கமாகப் போட்டால் அது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 66, திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.*

66—

தொட்டியம் தொகுதியில் சாயத் தொழிற்சாலை ஏற்படுத்துதல்

***23535–திரு. என்.ஆர். சிவபதி :**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 9

(அ) தொட்டியம் தொகுதி, தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில், சாயத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி சரகத்தில் உள்ள தாத்தையங்கார்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 1993–94 ஆம் ஆண்டு பகுதி இரண்டாம் திட்டத்தின்கீழ் சாயச்சாலை ஏற்படுத்த ரூ. 4.275 லட்சம் அனுமதி வழங்கப்பட்டது. கட்டுமானப்பணிகள் தொடர்பான ஆயுத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 10–25

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதியில் வாழ்கிற, அதாவது தாத்தைய்யங்கார்பேட்டை ஒன்றியத்தில் வாழ்கிற கைத்தறி நெசவாளர்கள் சார்பிலும் அந்தக் கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்தத் தொழிற்சாலை கட்டுமானப் பணி எப்போது தொடங்கி எப்போது முடிவடையும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாயச்சாலை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று தற்போது பேஸ்மென்ட் வரையிலும் கட்டப்பட்டுள்ளது. மிக விரைவில் இந்த சாயச்சாலை துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரையில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைத் துரிதப்படுத்தி செயல்படுத்த வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்வதோடு அது எப்போது முடிவடையும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பேஸ்மென்ட் வரையிலும் வந்திருக்கிறது. மிக விரைவில் இது முடிவடையும்.

1994 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

67—

மேட்டூர் தொகுதியில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளை திறக்க நடவடிக்கை

*35551-திருமதி செ. சுந்தராம்பாள் :

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதியில் மூடிக்கிடக்கும் மேட்டூர் டெக்ஸ்ட்டைல்ஸ், அலெக்ஸாண்டர் திரெட் என்னும் இரு தொழிற்சாலைகளையும் கூட்டுறவு முறையில் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலையினை கூட்டுறவு முறையில் திறக்க இயலாது. அலெக்ஸாண்டர் திரெட் நிறுவனம் இந்த மில்லின் ஒரு பகுதி ஆகும்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியில் கடந்த 9 ஆண்டுகளாக மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலையும், அதனுடைய தொடர்பான ஆலையான அலெக்ஸாண்டர் திரெட் கம்பெனியும் மூடிக்கிடக்கின்றன. அங்கே பணிபுரிகிற 2820 குடும்பங்கள் மிகவும் வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் மூடிய ஆலைகளைத் திறந்து தொழில்புரட்சியைச் செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து இந்த இரண்டு தொழிற்சாலைகளையும் திறப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை கடந்த 11-7-1990 அன்று திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட பிறகு இந்த ஆலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினையால் 2-7-1992 அன்று மீண்டும் மூடப்பட்டது. இந்த நூற்பாலைக்குக் கடன் உதவி அளித்தவர்கள் உயர்நீதிமன்றத்தில்